# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C)

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, RANIPET

Case No.**SC.No.329/2023**
Prosecution: **PW1**

**Deposition of the witness of LW1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | திரு.தியாகராஜன் | **District** | இராணிப்பேட்டை |
| **Name** | திரு.முனிசாமி | **Calling** | செங்கல் சூளை |
| **Age** | 44 | **Religion** | --- |
| **Village/Town** | ஒழுகூர் | **Caste** | --- |
| **Taluk** | சோளிங்கர் | **Aadhar Card.No** | 4810 0472 0598 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of April 2025.

எதிரி ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>**முதல் விசாரணை:-**</u>

நான் ஒழுகூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் செங்கல் சூளை தொழில் செய்து வருகிறேன். எனக்கு தேவராஜ் என்பவரை தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு அடையாளம் தெரியாது. 2017-ம் ஆண்டு ஒருநாள் நானும், தேவராஜ் என்பவரும் கோவிந்தச்சேரி குப்பம் ஏரிக்கரை வழியாக சென்று கொண்டிருந்த போது போலிசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். அதற்கு சாட்சியாக எங்களிடம் சில தாளில் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி அமுதா என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. என் முன்னிலையில் அந்த ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள என் கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1** ஆகும். என் முன்னிலையில் போலிசார் எந்தப் பொருளும் கைப்பற்றவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழிப்பு மகசர் ஆகியவற்றில் முதலாவதாக உள்ள என் கையெழுத்து மட்டும் முறையே **அ.சா.ஆ.2** மற்றும் **அ.சா.ஆ.3** ஆகும். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இராணிப்பேட்டை மதுவிலக்கு அமல் பிரிவு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக சாட்சியம் அளிக்காததால், அவரை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டார். சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.)

<u>**அரசு தரப்பு குறுக்குவிசாரணை:–**</u>

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்த போது நானும், தேவராஜ் என்பவரும் கோவிந்தச்சேரி குப்பம் ஏரிக்கரை வழியாக செல்லும் போது இராணிப்பேட்டை மதுவிலக்கு அமல் பிரிவு போலிசார் ஆஜர் எதிரியை விசாரித்தக்கொண்டிருந்ததகாவும், அப்போது ஆஜர் எதிரி அமுதா எந்தவித அச்சுறுத்தலும், ஆசை வார்த்தைகளுமின்றி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் என் முன்னிலையிலும், தேவராஜ் என்பவர் முன்னிலையிலும் பதிவு செய்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியிடமிருந்து சுமார் 105 லி நாட்டுச்சாரயத்தை மகசரில் எங்கள் முன்னிலையில் கைப்பற்றியதாகவும், அதில் ரசாயன பரிசோதனைக்காக மாதிரிக்கு எடுத்தது போக மீதமிருந்த நாட்டுச்சாரயத்தை அங்கேயே எங்கள் முன்னிலையில் கீழே கொட்டி அழித்ததாகவும், அதற்கான அழிப்பு மகசர் தயார் செய்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழிப்பு மகசர் ஆகியவற்றிலும் நானும், தேவராஜ் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டதாகவும் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:–**</u> இல்லை

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

(S/d).A.Balakrishnan
Assistant Sessions Judge/Chief Judicial Magistrate,
Ranipet.